# ‘‘வனவிலங்குகளினால் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காணல்’’ சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய கள ஆய்வு

**MIS.Nishaya (1), MMF. Rihaniya (2), ARF Rilasha (3)**

[1,3] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

[2] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

Mohammedriflan98@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்று உலகில் பரந்து வாழும் பல்வேறு கிராம மக்கள் பல விதமான பிரச்சினைகளையும் சவால்களையும் தினமும் எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமாக இனங்காணப்படக்கூடிய ஒரு பிரச்சினையாக வனவிலங்குப் பிரச்சினை காணப்படுகிறது. இவ்வனவிலங்குப் பிரச்சினையால் கிராம மக்கள் உயிர் சேதம், உடமை சேதம், விவசாய நில இழப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமாகவே உள்ளனர். இவர்களுக்கான தீர்வுகள் உரிய கால அடிப்படையில் அரசினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாய்வு அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனைப் பகுதிக்குட்பட்ட ஆலங்குலம் மற்றும் சம்புநகர் ஆகிய கிராமங்களை உட்படுத்திய ஆய்வாகும். ஆவ்வூர் மக்கள் எவ்வகையான வனவிலங்குகள் மூலம் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். மற்றும் அதன் மூலம் அவ்வூர் மக்கள் முகம் கொடுக்கும் இழப்புக்களும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கான சில பிரச்சினைகளையும் இவ்வாய்வு வெளிக்கொணர எத்தனிக்கின்றது. இவ்வாய்வுக்காக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** வனவிலங்கு, அட்டாளைச் சேனைப் பிரிவு, சேதம், கிராமம்

## அறிமுகம்

இலங்கை நாட்டில் அம்பாறை மாவட்டத் தொகுதியில் அமைந்திருக்கும் இரு சிறு கிராமங்கள் தான் சம்புநகர் மற்றும் ஆலங்குலம். இந்த கிராமங்களில் வாழும் மக்கள் வனவிலங்குகளினால் எதிர்நோக்குகின்ற அசொகரியங்கள் என்ன? என்பது பற்றிய ஒரு தேடல் முயற்சியாகவே இது உள்ளது. ஆலங்குலம் மற்றும் சம்புநகர் என்ற இரண்டு கிராமங்களும் அட்டாளைச்சேனை நகரில் இருந்து 10km துாரத்தில் அமைந்துள்ள கிராமங்களாகும். அடிப்படை வசதிகள் கூட அற்ற மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் கிராமங்களாகவே காணப்படுகின்றன. இரண்டு கிராமங்களுமே நீர் வசதி, போக்குவரத்து வசதி எதுவும் இல்லாமல் பெரும் துன்பப்படுகின்ற நிலையிலேயே உள்ளது.

ஆலங்குலத்தில் 280 குடும்பங்கள் வாழ்கின்றனர். அனைவரும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்ற குடும்பங்களாகும். கல்வி கற்கக்கூடிய மாணவர்களோ அரசாங்கத்தொழில் செய்யக் கூடிய அரச ஊழியர்களோ அங்கு இல்லை என்றே கூறலாம். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தங்களுக்கு சிரமமானதாக உள்ளதாகவும் அவர்களது கல்விக்கான செலவை கொண்டு செல்ல முடியாதுள்ளதாகவும் அம்மக்கள் கூறுகின்றனர். காரணம் பொருளாதார வசதி இல்லை.

சம்புநகர் மக்களது நிலையும் இவ்வாறானதாகவே உள்ளது. சம்புநகரில் மொத்தமாக 75 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களுள் 25 குடும்பங்கள் அங்கவீனர்களையும் நோயாளர்களையும் கொண்ட குடும்பங்களாகும். மிகவும் வறுமைக்குற்பட்ட பகுதியாக இது காணப்படுகிறது. ஏனெனில் இங்கு பெரும்பாலும் ஒவ்வொரு வீடுகளிலும் அங்கவீனர்கள் காணப்படுவதால் அவர்களைப் பராமரிக்க ஒருவர் தேவைப்படுகிறார். எனவே 2,3 அங்கத்தவர்களைக் கொண்ட வீடுகளில் வேலைக்கு செல்ல சந்தர்பம் இல்லாமலும் உதவிக்கு யாரும் இல்லாமலும் கஷ்டப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. விவசாயம் செய்வதற்கான நிலம் இவர்களுக்கு உண்டு. ஆனால் விவசாயம் செய்யும் வசதி இல்லை.

இவ்வாறான நிலையில் வாழ்கின்ற மக்கள் தங்களது ஜீவனோபாயத்திற்காக விவசாயத்தில் இறங்குகின்ற போது அவர்கள் வனவிலங்குகளால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடுகிறது. இக்கிராம மக்கள் தமது ஜீவனோபாயத்திற்காக நெல், கரும்பு, சோளம் போன்ற பயிர்ச்செய்கைகளை மேற் கொள்கிண்றனர். என்றாலும் இவர்களின் இந்த பயிர்ச்செய்கை வனவிலங்குகளால் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. வனவிலங்குகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகளாக, யானைகளின் மூலம் நெல், கரும்பு பயிர்ச்செய்கைகள் சேதப்படுத்தப்படுவதோடு பன்றி, முள்ளம்பன்றி,குரங்கு போன்றவற்றாலும் அவர்களின் ஏனைய சிறுபயிர்களும் பாரிய சேதத்திற்கு உள்ளாகின்றன. இதற்கான தீர்வுகள் இவர்களுக்கு இன்றுவரை கொடுக்கப்படவில்லை. இவர்கள் தமது வாழ்வை மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் கொண்டு செல்கின்றனர். எனவே இவ்வாய்வானது சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்கள் வனவிலங்கினால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்காண்பதாக உள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

ஆலங்குலம் மற்றும் சம்புநகர் விவசாய மக்கள் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதிலும் வனவிலங்குகளினால் ஏற்படும் பிரச்சினைகளே அதிகமாக காணப்படுகின்றது.

**நோக்கங்கள்**

- ஆலங்குலம் மற்றும் சம்புநகர் மக்கள் வனவிலங்குகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
- ஆடையாளப்படுத்தப்பட்ட சில பிரச்சினைகளை கட்டுப்படுத்த சில பரிந்துரைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

உலகில் பரந்து வாழும் ஏழை விவசாயக் கிராம மக்கள் வனவிலங்குப் பிரச்சினைகளின் மூலம் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். இந்திய நாட்டைச் சேர்ந்த அஸ்ஸாம் என்பவர் Human-wildlife conflict in the forest fring village of barak valley என்ற ஆய்வின் முடிவுகளின் படி இந்தியக் கிராமமான Barak valley குரங்குகளின் தெலைலைகளினால் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் என்றும் அக்கிராமங்களின் பயிர்நிலங்கள் தொடரட சேதங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் இதற்காக அரசாங்கத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மற்றும் பெங்களூரைச் சேர்ந்த Indian Institute Of Advanced Studies என்ற நிறுவனம் இந்திய கிராம மக்கள் யானைத் தொல்லைகளினால் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் விவசாய நிலங்களின் பாதிப்பும் பல்வேறு பொருளாதார இழப்புக்களுக்கு இட்டுச் செல்வதாகவும் ஏழை விவசாய மக்கள் தமது

உயிரை இழக்குமளவு இவ்யானைத் தொல்லைப் பிரச்சினை இட்டுச் சென்றிருப்பதாக ஆய்வின் முடிவுகள் தெரியப்படுத்துகின்றன.

அந்த அடிப்படையில் இலங்கையில் அம்பாறை மாவட்டத் தொகுதியில் அட்டாளைச்சேனைப் பகுதிக்குற்பட்ட ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்கள் வனவிலங்குகளினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆய்வுமுறையியல்**

வனவிலங்குகளால் ஏற்படும் பிரச்சினைகளை இணங்காணுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட இரண்டு கிராமங்களான சம்புநகர் மற்றும் ஆலங்குலம் பகுதிகளில் இரண்டுவிதமான ஆய்வுமுறைகள் கையாளப்பட்டன. புண்புரீதியில் அமைந்த இவ்வாய்வு முறைகள் முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாக அமைந்தது. முதலாம் நிலைத்தரவுகள் எனப்படும் போது தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களை நேரடியாக சென்று அவதானிப்புக்களை மேற்கெண்டதன் மூலம் பாதிக்மப்பட்ட பயிர் நிலங்கள், பாதிக்கப்பட்ட கட்டடங்கள் என்பவற்றை அவதானித்ததன் மூலம் சில துள்ளியமான தரவுகளை எம்மால் பெற முடியுமாக இருந்தது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நேர்காணலை மேற்கொண்டதன் வாயிலாக கிடைக்கப்பெற்ற தரவுகளும் எமது ஆய்வை முழுமைப்படுத்த உதவியது. அந்த வகையில் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பகுதிகளில் வாழும் குடிமக்கள் விவசாயத்தை பிரதான ஜீவனோபாயமாக கொண்ட விவசாயிகள் அதிலும் அனுபவத்தின் அடிப்படையில் தரவுகளை திரட்டிக் கொள்வதற்கும் எமது ஆய்வை இலகுவாக மேற்கொள்வதற்கும் சில வயது முதிர்ந்த விவசாயிகளின் வாக்கு மூலங்கள் துணை புரிந்தன. அத்தோடு இளம் வயதினரில் பெரும்பாலானோர் விவசாயத்தை மேற்கொள்வதால் ஏற்படுகின்ற வனவிலங்குப்பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவித்தனர். மேலும் அப்பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட பெண்களும் தமது வாழ்வில் எதிர்நோக்கும் பாரிய சவாலாக வனவிலங்குகளினால் ஏற்படும் இடையூறுகள் குறித்து தரவுகளை முன்வைத்தனர்.

அத்தோடு இரண்டாம் நிலைத் தரவுகளும் இவ்வாய்விற்கு உற்படுத்தப்பட்டன. இவ்வாய்வுத்தலைப்பு தெரடர்பான மேலதிக தகவல்கள் அடங்கிய புத்தகங்கள் திரட்டப்பட்டன. மேலும் எமது ஆய்வின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கிடைக்கப் பெற்ற தகவல்களை coding முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வுகள் செய்யப்பட்டு Excel sheet மூலம் விளக்கங்களும் வரைபடங்களும் வழங்கப்பட்டுள்ளன


**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

இவ்வாய்விற்காக மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராம மக்களின் குடித்தொகை வீதக்கணக்கு, எவ்வாறான வனவிலங்குப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர், அவ்வூர் மக்கள் எதிர்கொண்ட உயிர், உடமை, பயிர்நில சேதங்கள் போன்றவை மதிப்பிடப்பட்டன. இந்த அடிப்படையில் அவ்வூர் மக்களிடம் மேற்கொண்ட நேர்காணலின் படி கிராமத்தினுள் புகுந்து பிரச்சினைசளை ஏற்படுத்துகின்ற விலங்குகளாக யானை, பன்றி, முள்ளம்பன்றி, குரங்குகள், பட்சிகள் போன்றவை அடையாளப்படுத்தப் பட்டதோடு இவைகள் மூலம் பாதிப்புக்குள்ளாகும் உயிர், உடமை, பயிர்நில சேதங்களும் இனங்காணப்பட்டன.


மேற்குறிப்பிட்ட இரண்டு பிரதேசங்களிலும் வனவிலங்குகளினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதனால் மேற்குறித்த பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தமது அன்றாட வாழ்வில் பல நெருக்கடிகளை சந்திக்கின்றனர். மேலும் பொருளாதார ரீதியிலான பாதிப்புகளுக்கும்

அதிகம் முகங்கொடுக்கின்றனர். எனவே அப்பகுதி மக்களின் பிரதான ஜீவனோபாயமாக காணப்படும் விவசாயத்தை பாதிக்கும் பாரிய காரணியாக வனவிலங்குப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டதோடு உயிர், உடமை சேதங்களையும் ஏற்படுத்தக்கூடியனவாகவும் வனவிலங்குகள் அமைந்தன என்பதை எம்மால் இனங்கண்டு


பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட வரைபடங்களை நோக்கும் போது உயிர், உடமை, விவசாய நில சேதங்களின் அடிப்படையில் விவசாய நிலங்களே அதிகமாக சேதங்களுக்கு உட்பட்டுக் காணப்படுகிறது. ˙ 10 வருட கால இடைவெளியில் இடம் பெற்ற சேதங்களை எடுத்துப்பார்கின்ற போது உயிர் சேதம் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் உடமைகள் மற்றும் விவசாய நிலங்களின் சேதங்கள் தொடர்ந்த வண்ணமே காணப்படுவதாகவும் கூறுகின்றனர். உயிர் சேதம் 5% ஆகவும் உடமை சேதம் 40% ஆகவும் விவசாய நிலங்களின் சேதம் 55% ஆகவும் இடம் பெறுவதாக ஆய்வின் போது தெரிய வந்துள்ளது.




வனவிலங்குப் பிரச்சினைகளை நோக்கும் போது யானைகளினால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளே அதிகமாக காணப்படுகிறது. இவ்விரண்டு கிராமங்களிலும் மேற்கொண்ட நேர்காணலின் அடிப்படையில் யானைகளினால் ஏற்படும் பிரச்சினை 70% ஆக காணப்படுவதோடு குரங்குகள் 10% ஆகவும் முள்ளம்பன்றிகள் 10% ஆகவும் பன்றி 5% ஆகவும் பட்சிகள் 5% இங்குள்ள விவசாயிகளுக்கு சேதங்களை விளைவிக்கின்றன. இவ்விரண்டு ஊர் மக்களினதும் நேர்காணலின் அடிப்படையில் யானைபளினால் ஏற்படும் பிரச்சினை அதிகமாக காணா்ாடுகிறது. ஆதிகமான பயிர்நில சேதங்கள் மற்றும் உயிர் சேதம் மற்றும் சேதத்திற்குள்ளாகும் பொதுக் கட்டடங்கள், மதில்கள், வேலிகள் போன்ற முக்கியப் பிரச்சினைகள் யானைகளினாலேயே எதிர் நோக்குகின்றனர்.



இவ்விரண்டு கிராம மக்களும் மேற் கொள்ளும் விவசாய வகைகளை நோக்கும் போது நெல், கரும்பு, சோளம் மற்றும் ஏனைய சிறு பயிர் வகைகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெல் 60% ஆகவும் கரும்பு 20% ஆகவும் சோளம் 10% ஆகவும் கச்சான் 5% ஆகவும் ஏனைய பயிர் வகைகள் 5% இவர்களது பயிர்ச் செய்கை முறை இடம் பெறுகிறது என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.




**பரிந்துரைகள்**

- ஊரில் மேல் மட்ட அங்கத்தவர்களான ஊர்தலைவர்கள், பள்ளித்தலைவர்கள், கிராம சேவகர்களுக்கு வனவிலங்குப் பிரச்சினையால் இவ்வூர் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை வழங்கல்.
- இவ்வூர் மக்கள் எதிர்நோக்கும் இப்பிரச்சினை பற்றிய தெளிவான தகவலை உரிய காலத்திற்குள் ஊர் மேல் மட்ட அங்கத்தவர்கள் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தல்.
- இவ்விரண்டு கிராமங்களிலும் வனவிலங்குப்பிரச்சினையால் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகளை அரசு மேற்கொள்ளல்.
- இவ்வனவிலங்குப் பிரச்சினையால் இவ்விரண்டு கிராமங்களிலும் கல்வியைத் தொடரும் பிள்ளைகளின் உடல், உள பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல். முக்கியமாக உளப்பாதிப்புக்கு உள்ளான பிள்ளைகளின் பிரச்சினைகளை இனங்காணல்.
- ஒழுங்கான முறையில் அமைக்கப்படாத கட்டிடங்கள் , மதில்கள், விவசாய வேலிகள் போன்றவற்றை இனங்கண்டு ஊர்மக்களுக்கு திருத்தி அமைத்துக் கொடுத்தல்.
- மக்கள் எதிர்கொண்ட சேதங்களுக்கான நஷ்ட ஈடுகளை உரிய நேரத்தில் அரசு வழங்க வேண்டும்.
- உயிர் சேதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச மற்றும் தனியார் உதவிகளை வழங்கல்.
- கட்டுப்பாடற்ற முறையில் வனவிலங்குகள் ஊரினுள் நுளைவதை தடுப்பதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- யானை, பன்றி போன்ற ஆபத்தான விலங்குகள் நுளையாதவாறு மின்சார வேலிகளை அமைத்தல்.
- மக்களுக்கு தற்காப்புக் கலைகள் மற்றும் விலங்குகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறும் வழிகள் தொடர்பாக விளக்கமளித்தல்.

**முடிவுரை**

அட்டாளைச்சேனைப் பிரிவிற்குற்பட்ட ஆலங்குளம் மற்றும் சம்புநகர் கிராமங்களில் வனவிலங்குப் பிரச்சினைகளால் மக்கள் அதிகம் பாதிப்படைந்துள்ளனர். இவ்வனவிலங்குகளில் யானைகளின் தொல்லையே அதிகம் செல்வாக்கு செலுத்துகிறது. இவ்வனவிலங்குப் பிரச்சினைகள் மூலம் இரண்டு ஊர் மக்களும் உயிர் சேதம், உடமை சேதம் மற்றும் உளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர். உடமை சேதங்களில் வீடுகள் மற்றும் பல பரப்புக்களைக் கொண்ட விவசாய நிலங்களையும் இம்மக்கள் இழந்துள்ளனர். தமது அன்றாட வாழ்வை விவசாயத்தைக் கொண்டு நகர்த்தும் இவ்வூர் மக்களுக்கு இவ்வன விலங்குப் பிரச்சினை பாரிய சவாலாக மாறிக்கொண்டு வருகின்றது. எனவே சமூக ஆர்வலர்களுக்கும் ஊர் பொது அமைப்புக்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமைய வல்லது.

**உசாத்துணைகள்**


1. ஜான் பெல்லமிபாஸ்டர் சூழலியற் புரட்சி ISBN 978
2. வெ. ம. சுரேவு சுற்றுச்சூழற் பகுதி 2009 எம். ஐ. எம். கலில்
3. எம். ஐ. எம். கலில் காட்டுப்பரம்பல் புவியியல்துறை South Eastern University
4. அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் - அறிக்கை 2018
5. Annual Elephant Death Report ( Department Of Wild Life Conservation)
6. Thirgood S. woodroffe A (2005) The Impact Of Human Wildlife Conflict On Human lives
7. Prajad T . Pastrorini J. (2011) Current Status Of Asian Elephants In Srilanka